பட்டம் பெற்று வெளிவருகிற நிலை இருக்கிறது. அவர்களில் 100-க்கு 90 பேருக்காவது வேலை தரும் நிலைமை இன்றைக்கு இருக்கிறது. இன்னொரு இடத்தில் புதிதாகத் துவக்க வேண்டுமென்றால், சாதாரணமாக ரூ. 25 லட்சம் அல்லது ரூ. 30 லட்சம் தேவை. வருகிற மாணவர்களைப் பிரித்து இரண்டு இடங்களில் படிக்கச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். பொருட்செலவுக்கு ஏற்ற பயன் இருக்குமா என்ற ஐயுறவு இருக்கிற காரணத்தால், புதிய கல்லூரி தொடங்கலாம் என்ற நம்பிக்கை இல்லை.

*Mahatma Gandhi Tuberculosis Sanatorium, Thanjavur*

*11 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) the facilities available at the Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur ;

(b) whether there is any proposal for its improvements; and

(c) if so, the details thereof?

*மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனை, தஞ்சை*

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூரில் உள்ள மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனையில் கிடைக்கும் வசதிகள் யாவை ?

(இ) அந்த வசதிகளை மேம்படுத்த செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) செங்கிப்பட்டி மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனை நவீன மருந்துகளைக் கொண்டு காச நோய் மற்றும் அதைச் சார்ந்த நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பெரிய அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன.

(இ) & (உ) ஆம். அரசு நிதி உதவியுடன் கார்டியோ, தொராசிக் அறுவை சிகிச்சைப் பகுதி ஆரம்பிப்பதற்கான ஒரு கோரிக்கை அரசின் ஆய்விலுள்ளது. நிதி தேவைப்படுகிற காரணத்தால், நிதி வசதிக்காகக் காத்திருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மகாத்மா காந்தி காச நோய் மருத்துவ மனையில் உள்துறை நோயாளிகளாக இருக்க வேண்டியவர்களைப் பதிவு செய்துகொள்ளச் சொல்லுகிறார்கள். பதிவுசெய்து கொண்டு ஒரு ஆண்டு காலத்திற்குப் பிறகும்கூட 'இன்-பேஷன்ட்' ஆக இருக்கிற வசதிகள் கிடைக்காமல், பலர் இறந்துபோன பிறகுதான் அவர்களை மருத்துவ மனையில் சேர்த்துக் கொள்வதாகக் கடிதங்கள் வருகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ? பதிவு செய்துகொண்டவர்களை இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாகவாவது இன்-பேஷன்ட்—ஆகச் சேர்த்துக்கொள்ளும் வசதியை அரசு செய்து கொடுக்குமா ?

24th January 1972]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மற்ற மருத்துவ மனைகளில் இன்-பேஷன்ட் என்று சொல்லுவதற்கும், காச நோய் மருத்துவ மனையில் இன்-பேஷன்ட் என்று சொல்லுவதற்கும் ஒரு வேறுபாடு உண்டு. மற்ற மருத்துவ மனைகளில் 3 அல்லது 7 நாட்கள் தங்கிக்கூட சிகிச்சை பெற்றுத் திரும்புகிறவர்கள் பலர் உண்டு. ஆனால் காச நோய் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறுகிறவர்கள் ஏறத்தாழ 3 முதல் 6 மாதம் வரையில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. புதிய நோயாளிகளைக் காப்பாற்ற, பழைய நோயாளிகளைக் கைவிட முடியாத நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அழைத்துக்கொள்ள முடியாத அளவில் இட நெருக்கடியான நிலைமை இருக்கிறது. சேர்த்துக்கொள்ளப்பட்ட நோயாளிகளைக் காப்பாற்றுவதில் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவரவர்களே, இந்த மருத்துவ மனை தோன்றிய காலத்திலிருந்து இன்று வரையில் சூப்பரின்டென்டாக இருந்து வருபவர் அந்த மனையில் பணியாற்றும் ஊழியர்களை மதமாற்றம் செய்வதில் அக்கறை காட்டுகிறார் என்ற புகார் ஏதும் அரசுக்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தமிழகத்தில் உள்ள எந்த ஒரு மருத்துவ மனையிலும் இப்படிக் கட்டாய மதமாற்றம் செய்வதாகப் புகார் வரவில்லை. நோய் உடையவர்கள், துன்பப்படுகிறவர்களிடத்தில் மதச் சார்புடையவர்கள் ஆறுதல் அளிக்கும் பேச்சுக்களைப் பேசலாம். ஆனால் மதமாற்றம் செய்கிறார்கள் என்று சொல்லுவதற்கு எவ்விதமான சான்றும் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, காச நோயாளிகளைப் பதிவு செய்கிறபோது, சிலர் முற்றிய நிலைமையில் நோயுற்றவர்களாக இருக்கிறார்கள், நோயின் தரத்தைப் பிரிக்காமல், எல்லோரையும் ஒரே மாதிரியாகக் கருதி கடிதங்கள் அனுப்புகிறார்கள். எனவே நோய் முற்றியிருந்தால், அவர்களுக்கு உடனடியாகக் கடிதம் எழுதவும், நோய் சாதாரணமாக இருந்தால், அவர்களுக்குச் சிறிது காலம் கடந்து கடிதம் எழுதுவதும் போன்ற முறையை அரசு அமுலுக்குக் கொண்டுவருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லிய கருத்து அந்த மருத்துவ மனைக்குத் தெரிவிக்கப்படும். கூடியவரையில் அந்த ஆலோசனையை நிறைவேற்ற முயற்சிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Apprenticeship Training Scheme*

*12 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) the number of Appprentices who have passed out in this State under the Apprenticeship Training Scheme during 1970–71; and

(*b*) (*i*) Trades and (*ii*) Industries in which they have been trained?